31st October 1957]

SRI K. ANBAZHAGAN : சேரிகள் சீரமைப்பு சம்பந்தமாக ஒரு கருத்தினை அறிய விரும்புகின்றேன். நகரின் நடுப் பகுதிக்கு வந்து உழைத்து வாழும் ஏழை சேரிவாழ் மக்களுக்கு அருகாமையில் குடிசைகள் இல்லாததால், அவர்கள் தாங்கள் வேலை செய்யும் இடங்களிலிருந்து 3 மைல், 5 மைல், 7 மைல் தொலைவில் வாழ வேண்டியிருப்பதால், அவர்களுக்கு மன நிம்மதியும் இட வசதி பற்றி முழுத் திருப்தியும் அளிப்பதாக இல்லை. நகரில் இம்மக்களுக்கு வசதியான குடியிருப்பு அமைக்கக் கூடியதாக ஜமீன்தார்களுக்குச் சொந்தமான பல நிலங்கள் காலியாக இருக்கின்றன. அவைகளை இந்த ஏழை மக்களுக்காக பெற்று அங்கே குடிசைகளைக் கட்டித் தருவதற்கு அரசாங்கம் திட்டமிடுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குடிசைவாழ் மக்களுக்காகப் புதிதாக இடம் வாங்க வேண்டுமென்றால், சர்க்கார் அவைகளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டும். மற்ற இடங்களில் 100 பேர்களுக்கு இட வசதி செய்து கொடுக்கமுடியுமானால், கனம் அங்கத்தினர் குறிப்பிடும் இடங்களில் ஒருவருக்கோ அல்லது 10 பேர்களுக்கோ தான் வீடுகள் கட்டித் தர முடியும். இந்த விஷயம் நிலத்தின் விலையைப் பொறுத்திருக்கிறது. குறைவான விலைக்கு எவ்வளவு அதிகமான இடத்தைப் பெற முடியும், எவ்வளவு அதிகமான பேர்களுக்கு இட வசதி செய்து கொடுக்கமுடியும்—என்று பார்த்துத் திட்டமிட வேண்டியிருக்கிறது.

SRI P. G. MANICKAM : மெட்ராஸ் சிடி ஸ்லம் இம்ப்ரூமெண்ட் ஆக்ட்-ஐ மேஜர் பஞ்சாயத்துக்களிலும் முனிசிபாலிடிகளிலும் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

SRI M. R. KANDASAMI MUDALIAR : இப்போது நடந்து வரும் சேரி ஒழிப்புத் திட்டங்கள் எல்லாம் நகரப் பிரதேசங்களில் இருக்கிறது. இது கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : சென்னை நகரத்தில் சேரிகள் பிரச்னை மக்களை மிகவும் கொடுமையாக பாதிக்கிறது என்பதால், முதன் முதலாக ஒரு திட்டத்தை சென்னை நகரத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறோம். பிற இடங்களில் விஸ்தரிப்பது பற்றி பிறகு ஆலோசிக்கப்படும்.

SRI T. KARIA GOUNDER : கனம் தலைவர் அவர்களே, ஜமீன்தார்கள் அதிக நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கனம் நண்பர் ஸ்ரீ அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே, ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டப்படி ஜமீன்தாரிடமிருந்து சர்க்கார் நிலங்களைக் கைவசம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஜமீந்தார்களுக்குச் சொந்தமான காலி நிலங்களை எடுத்துக்கொள்வதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : The Hon. Minister need not answer this question.

*Rice bran.*

* 50 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of rice bran allowed to be exported during 1957–58 from the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The quantity of rice bran allowed to be exported during 1957–58 is reported to be 105 tons.

SRI N. K. PALANISAMI : வெளி நாடுகளுக்குத் தவிடு அனுப்புவதில் என்னென்ன விதிகள் செய்யப்பட்டிருக்கிறது ?

[31st October 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த அரசாங்கத்தைப் பொருத்தமட்டில், வெளி நாடுகளுக்கு தவிடு அனுப்பப்படக் கூடாது, இந்த நாட்டிலேயுள்ள மாடுகளுக்குத் தேவையாயிருக்கிறது என்று மத்திய அரசாங்கத்தின் ஜாயிண்ட் சீப் கண்ட்ரோலர் ஆப் எக்ஸ்போர்ட்ஸ் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இந்தத் தவிடானது ரயில் மூலமாக அனுப்ப முடியாது என்று அமைச்சர் சொல்லுகிறுர்கள் என்று நினைக்கிறேன். ஆனுல் லாரி மூலமாக அரசாங்கத்திற்குத் தெரியாமல் தவிடு ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரிகிறது. இதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏற்றுமதிப் பிரச்னையெல்லாம் இந்த இந்திய நாட்டைவிட்டு அயல் நாட்டுக்குப் போகும்போது தான் ஏற்படும். லாரியில் அனுப்பும் பிரச்னை இல்லை. ஆகவே, ஏற்றுமதி செய்வது கண்டிப்பாக எதிர்க்கப்பட்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : இது நம்முடைய துறைமுகத்தில் நேரடியாக ஏற்றுமதி செய்யப்படவில்லை. நம்முடைய ராஜ்யத்திலிருந்து வேறு நாடுகளுக்குக் கொண்டுபோய் வேறு துறைமுகங்களிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாகத் தெரிகிறது. அப்படிப் போகாமல் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம் ராஜ்யத்திலிருந்து வேறு ராஜ்யங்களுக்குத் தவிடு போவதென்றுல் அது தவறென்று சொல்வது சரியல்ல. ஆனுல் கூடிய வரையில் அது ஏற்றுமதியாகிப் போகக் கூடாது என்று தடுக்கவேண்டுமென்பது தான் இந்த அரசாங்கத்தின் அபிப்பிராயம்.

MR. SPEAKER : Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER.

### MESSAGES FROM THE COUNCIL

MR. SPEAKER : I have to announce to the House the following message, dated the 29th October 1957, from the Hon. the Chairman, Madras Legislative Council :—

"In accordance with Rule 115 of the Madras Council Rules, I transmit a copy of the Madras Registration of Veterinary Practitioners Bill, 1957 (L.C. Bill No. 2 of 1957) as passed by the Legislative Council on the 29th October 1957 and signed by me for the concurrence of the Assembly."

I have also to announce to the House the following message, dated 30th October 1957, from the Hon. the Chairman, Madras Legislative Council :—

"In accordance with Rule 115 of the Madras Council Rules. I transmit a copy of the Motor Vehicles (Madras Amendment) Bill, 1957 (L.C. Bill No. 3 of 1957) as passed by the Legislative Council on the 30th October 1957 and signed by me for the concurrence of the Assembly."